
காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்

# Russel Wong IN KYOTO | Life IN EDO








காட்சி கூடத்தின் வரைபடம்

# எடோவில் வாழ்க்கை x
# கியோட்டோவில் ரஸ்ஸல் வோங்

## 1 உகியோ-இ

உகியோ-இ – " மிதக்கும் உலகின் படங்கள்" – எனப்படும் இவை ஜப்பானின் ஓவிய, அச்சுப்பாணி மற்றும் புத்தக விளக்கப் படங்களாக எடோ காலத்தில் (1603–1868) தோன்றியவை ஆகும்.
 அதற்குரிய காலத்தில் பிரபலமாக விளங்கி, இப்போது இந்தப் படைப்புகள் ஜப்பான் மற்றும் உலகம் முழுவதும் கலைஞர்களால் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் படைப்புகள் எடோ காலத்திய நகரவாசிகளின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் காட்டுகின்றன. "மிதத்தல்" இந்த அச்சிட்ட படங்களில் தொடர்ந்து பல கருப்பொருட்களை விவரிக்கிறது. ஆனால் அந்த மரப்பலகை அச்சுக்கள், அவையும்

“மாறிக்கொண்டிருத்தல்”என்ற நேரடி மொழிபெயர்ப்பைக் கொண்டிருந்தாலும், அவை காகிதத்தில் அச்சிட்டபடி, ஒரு ஊடகம் தற்போதைய தகவலை தருவது போன்றாகும், இவ்வாறாக இதற்கு குறைந்த ஆயுள் என்பதே பொருந்தும்.

## கருப்பொருளின் பரந்த வீச்சகம்

இந்த அச்சுக்கலைகள் நடைமுறை செயற்பாட்டை கொண்டிருந்தன – துண்டுப்பிரசுரங்கள், நாடக விளம்பரங்கள், பதாகைகள் அல்லது அழைப்பிதழ்கள் ஆகியவை. இவை இயற்கைகாட்சிகள், புகழ்பெற்ற அடையாளக் கட்டிடங்கள் மற்றும் பிரபல பயணத் தலங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்தி பிரபலப்படுத்தின. இவை எடுப்பான ஆண்களையும் அழகிய பெண்களையும் படைப்புகளில் சாகாவரம் பெறச் செய்தன. இவை

வரலாறு, இதிகாசம், நாடகம், காமாந்திர (சுங்கா அச்சுகள்) ஊடகத்திலும் கூட தொடர்புடைய காட்சிகளைப் படம்பிடித்துக் காட்டின. இந்த வேறுபாடு எடோவின் வளரும் பொருளாதார உயிர்ப்பு மற்றும் பயனீட்டார்களின் ஒய்வுநேரம், ஷாப்பிங் மற்றும் இதர மனம்மகிழ் ஈடுபாடுகள் – உகியோ-இ அச்சுக்கலையை வாங்குதல் உட்பட, அதிகரித்துள்ள செலவினங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

## 2 கலைஞர்களைச் சந்தியுங்கள்

எடோ காலத்தில், உகியோ-இ இன் புரவலர்கள் பெரும்பாலும் சாமானிய மக்களாகவே இருந்தார்கள். உகியோ கலைஞர்கள் போக்குகளை முன்கூட்டியே ஊகிக்கவும் பாணிகளில் ஒரு படி முன்னே செல்லவும்

3 எதிர்பார்க்கப்படுகின்றனர். தலைமுறைக்குப் பின்னர் தலைமுறையாக மதியூகத் திறமைகள் எழுச்சிபெற்று இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்தன, ஜப்பானிய கலை வரலாற்றில் இது ஒரு மாயாஜால நிகழ்வாகவே தோன்றுகிறது.

இந்த சிறப்புக் கண்காட்சியில் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்களை சந்திப்பீர்கள். இவர்களில் பலர் பெயரைச் சொன்னாலே பிரபலமானவர்கள் எனுமளவிற்கு புகழ்பெற்றவர்கள் – ஹோக்குசாய், ஹிரோஷிகே, உடமாரோ ஆகியோர். பலர் தொழில்முறைப் பெயர்களை, புகழ்பெற்ற கடந்தகாலக் கலைஞர்களுக்கு அல்லது கவிஞர்களுக்கு  மரியாதை செலுத்தும் பொருட்டு சூடிக்கொண்டார்கள்.

## சுஸுகி ஹாருனோபு 鈴木春信 (1725–1770)

ஹாருனோபு பல வண்ணமயமான நிஷிகி-இ என்றழைக்கப்படும் மரப்பலகை அச்சுக்கலையை மேம்படுத்துவதில் முன்னணி வகித்தார். இவையே முதலில் பட் நாட்காட்டியாக உருவாக்கப்பட்டன. இவற்றில்தான் முதன்முதலாக ஒவ்வொரு வர்ணத்திற்கும் தனியாக தொகுதிகள் பயன்படுத்தப்பட்டன (இது தரநிலைத் தொழில்நுட்பமாக ஆகியது) ஹாருனோபுவின் படங்கள் அழகிய பெண்கள் (பிஜின்-கா), தனிப்படத் தென்படும் ஒருமை முகங்கள் மற்றும் மெல்லிய உடலமைப்புகள் இவரைப் புகழ்பெற்றவராக்கின.

## கிட்டகவா உட்டமாரோ 喜多川歌麿 (1753?–1806)

உட்டமாரோ பிஜின்-கா வகையில் (அழகிய பெண்களின் படங்கள்)

சிறப்பிடம் பெற்ற புகழ்பெற்ற கலைஞர் ஆவார். இவரது வடிவமைப்புகளில் பெண்மை அழகை வெளிப்படுத்துவதில் கைதேர்ந்தவராக இருந்தார், இவரது அரை-நீள ஓவியங்கள் பெரிய அளவில் பார்க்கப்பட்டு மிகவும் பிரபலமடைந்தன. உட்டமாரோவின் கருப்பொருட்கள் பல தரப்பட்டவை: அவர் யோஷிவாரா மனமகிழ் இல்லத்தின் உலகை – நடனமாதுகள் ( உயர் இடம்பெற்றவர்கள் – ஐரான்), தெருவில்நடப்போர், கெய்ஷா; மற்றும் எடோவின் பிற அழகிகள் – பரிசாரகப் பெண்கள், இல்லத்தரசிகள் மேலும் தாய்மார்கள் மற்றும் பிள்ளைகள். அவர்களனைவரையும் புதிய, அருமையான நுட்பங்களுடன் அற்புதமாக முழு வீச்சில் அவர்களின் அகவாழ்வின் கோலங்களும் உணர்வுகளும் வெளிப்படும் வகையில் வரைந்தார்.

## உட்டமாரோ யார்?

இந்தக் கலைஞரின் வாழ்க்கையைப் பற்றி நாம் ஏதும் அறியவில்லை. இவர் எங்கே பிறந்தார்? அவரது சமூக அந்தஸ்து – ஸமுராய், விவசாயி, வர்த்தகர் இவற்றில் என்ன? அவர் மனைவி மற்றும் பிள்ளைகளைப் பெற்றிருந்தாரா? அவரது வெளியீட்டாளர் ஜூசபுரோ ட்சுட்டயா அவர் ஒரு “கலைப் புனைபெயர்” உட்டமாரோ என்பதை தனது உண்மைப் பெயரின் அடிப்படையில் சூடிக்கொண்டார் எனத் தெரிவித்தார். “கிட்டகவா” என்பது அவரது பிறந்தபோது சூட்டப்பட்ட பெயரா என்பது தெரியவில்லை. உட்டமாரோ தனது ஐம்பத்து மூன்றாம் வயதில், 1806 ஆம் ஆண்டில் இறந்தார் என்பதை அறிகிறோம்.

## டோசுசாய் ஷரகு 東洲斎写楽 (active 1794–95)

ஷரகு இந்த மரப்பலகை அச்சுக்கலை உலகில் மிகவும் புதிரான கலைஞர் ஆவார். இவரது பெயர் திடுமென மே 1794 ஆம் ஆண்டு, தொடராக இருபத்தெட்டு அசல் படங்கள், மெய்உணர்வு  வெளிப்பாட்டு நடிகரின் படங்கள் (யாகுஷா-இ) அச்சுக் கலைகளாக, புகழ்பெற்ற வெளியீட்டாளராகிய ஜூசபுரோட்சுட்டயாவால் வெளியிடப்பட்டது. பத்து மாதங்கள் கழித்து, ஷரகு மறைந்தார். இவர் யார்? இவரது உண்மையான அடையாளம் பெரிதும் அலசப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள முடிபுப்படி இவர் ஒருவேளை அவா பிரதேசத்தைச் (இன்றைய டோக்குஷிமா வட்டாரம்) சேர்ந்த ஸாய்டோ ஜூரோபெய் என்ற ஒரு நோ நடிகராக இருக்கலாம் என்பதாகும்.

## புதிரான ஆளுமை, ஆனால் மிகவும் திறமையானவர்

ஷரகு மதியூகமுள்ள உற்றுநோக்கராக இருந்தார், அதனால் குறிப்பிட்ட நடிகர்களின் குணாதிசயங்கள் வெளிப்படும் உடற்காட்சி நிலைகளை அற்புதமாகக் கைப்பற்றி வரைந்துள்ளார். வழக்கத்திற்கு மாறான ஓவியங்கள் நடிகர்களின் உண்மை ஆளுமைகளை வெளிப்படுத்த வரைந்தார். ஆனால் அவர்களை ஆதர்சமாக ஆக்குவதற்காக அல்ல. ஆரம்பக் காலத்தில், இவர் கிரா-ஜுரி தொழில்நுட்பத்தைப் படங்களில் பயன்படுத்தினார் (பின்புலத்தில் பளிச்சிடும் தோற்றத்திற்காக மைக்கா துகள்களை சேர்த்தார்). பின்னர் அவர் முழு மனித உடலையும் படமாக்கும் பாணிக்கு நகர்ந்து, கிரா-ஜுரியை கைவிட்டு குறுகிய ஹோசோபோன் அளவு

காகிதத்தில் படைப்புகளை வரைந்தார். ஆரம்பத்தில் இவர் டோசுசாய் ஷரகு என்ற பெயருள்ள முத்திரையைப் பயன்படுத்தி கையொப்பமிட்டுள்ளார், பிறகு வெறுமனே ஷரகு என்று மட்டும் கையொப்பமிட்டுள்ளார்.

## ஷரகு யார்?

இவரது வாழ்க்கையைப்பற்றி ஏதும் அறியப்படவில்லை, இவரது சில சிறந்த கலைப்படைப்புகளைத் தவிர. இவரது பிறந்த தேதி என்ன? குடும்பப் பெயர்? அவர் செயலூக்கமாக இருந்தபோது வயது என்ன? இவரது புனைபெயர் எங்கிருந்து பெற்றார்? மிகவும் குறுகியகாலக் கலைப் படைப்புகளின் பிறகு ஏன் மறைந்தார்? இதைப்பற்றி நாம் அறியவில்லை.

## கட்சுஷிகா ஹோக்குசாய் 葛飾北斎 (1760–1849)

ஹோக்குசாய் 1760-ஆம் ஆண்டில் எடோவின் ஹோஞ்சோ மாவட்டத்தில் சுமிடா நதி தீரத்தில் பிறந்தார். இவரது பிள்ளைப்பருவப் பெயர் டோக்கிடாரோ. இவர் நகரின் கட்சுஷிகா என்ற இடத்தில் பிறந்ததால், இவர் அதைப் புனைபெயரில் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.

## பயிற்சியும் நீண்ட பணிக்காலமும்

கட்சுகவா ஷூன்ஷோவின் மாணவராக, ஹோக்குசாய் யக்குஷா-இ ( நடிகர் அச்சுகள்) களைப் படைத்தார். இருபதாம் வயதில், கலைப் பியறான் ஷுன்ரோ என்ற பெயரில் அவரது முதல் அச்சுகள் வெளியிடப்பட்டன. தனது 35-ஆம் வயதில், அவர் ஷூன்ஷோவின் கலைக்கூடத்தை விட்டு நீங்கி அவரது சொந்த

பாணியை பல வகைப்பாடுகளில் ஆராய்ந்தார்.

படங்களின் உதாரணங்களுடன் நையாண்டிக் கவிதைகள் (கியோகா இஹோரான்) உடன் கூடுதலாக பிரபல கற்பனைக் கதைக்கும் படங்கள் வரைந்துள்ளார், இவர் ஹோக்குசாய் மாங்கா (ஹோக்குசாய்  வரைகலை) என்ற வளரும் கலைஞர்களுக்கான முதன்மைப் புத்தகமாகத் திகழும் புக்த்தகத்தை தமது ஐம்பதுகளின் மத்தியில் படைத்தார். நிலப்பரப்பு அச்சுக்கலை வகையில் அவரது Thirty-six Views of Mount Fuji – என்ற புத்தகத்தை எழுபது வயதுக்கும் மேலாகியபோது வெளியிட்டார்!

## மேற்கத்திய கலையின் தாக்கம்

ஹோக்குசாய் மரப்பலகை அச்சுக்கலையில் உலகத்தின் மிகவும் புகழ்பெற்ற கலைஞர் ஆவார். ஐரோப்பாவிற்கு

ஹோக்குசாய்  தற்செயலாக அறிமுகப்படுத்தப்பட்டார்.  1850களில், ஃபிரான்ஸ் அச்சுத் தயாரிப்பாளர், பெலிக்ஸ் பிராக்மண்ட் (1833–1914) ஹோக்குசாய் மாங்காவின் ஒரு தொகுப்பைக் கண்டார் – அச்சுத் தயாரிப்பாளர் இறக்குமதி செய்த பீங்கான்களைப் பொதிய அது  பொதியும் காகிதமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவர் அந்தப் படங்களின் வன்மையான தூரிகைக் கோடுகளாளும் புதுமையான சேர்க்கைகளாலும் ஈர்க்கப்பட்டார். இந்த தற்செயல் கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு அவரை “ஜப்பனிஸ்மே” என்றழைக்கப்பட்ட ஜப்பானிய பாணித்தாக்கம் கொண்ட மேற்கத்திய கலை இயக்கத்திற்கு வித்திட வைத்தது. வின்சென்ட் வான் கோ, எட்கர் டெகாஸ், கிளாடி மொனேட் மற்றும் கஸ்டவ் கிளிம்ட் ஆகியோர் இந்த ஜப்பானிய

அச்சுக்கலையின் செல்வாக்கிற்கு ஆட்பட்ட பல கலைஞர்களில் சிலர் ஆவர்.

## பிறழ்ந்தவரா அல்லது வித்தியாசமானவரா? ஹோக்குசாய்ம, வெளிப்படையாக

ஹோக்குசாய் தமது வினோத ஆளுமைக்காகவும் பிறழ்ந்த நடத்தைகளுக்காகவும் நன்றாக அறியப்பட்டிருந்தார். இவர் அடிக்கடி தனது புனைபெயரையும் வசிப்பிடத்தையும் மாற்றிக்கொண்டார். இவர் வாழ்நாளில் 93 தடவை தனது வீட்டை மாற்றிக் கொண்டார்! இவர் தருமாவின் (போதிதருமரின் ஜப்பானியப் பெயர்) பெரிய படம் ஒன்றை உருவாக்கினார், இது 120 டட்டமி (சுமார் 200 சதுர மீட்டர்) அளவிலிருந்தது. வருத்தமளிக்கும்படியாக, இது இரண்டாம் உலகப்போரின்

குண்டுவீச்சினால் அழிக்கப்பட்டது. அவர் தாம் தேர்ந்தெடுத்து வேலைசெய்ய நினைத்த வகைப்பாட்டில் அவரது பாணியை மீண்டும்மீண்டும் மாற்றிக் கொண்டார்.

ஹோக்குசாய் 1849-ஆம் ஆண்டு அசக்குசா, ஷோடென்ஷோ என்ற இடத்தில் ஏறத்தாழ தமது 90-ஆம் வயதில் காலமானார்.  இவரது உடல் ஷெய்க்யோ-ஜி இல் அடக்கம் செய்யப்பட்டது.

## பெண் உகியோ கலைஞர்கள் உள்ளனரா?

கட்சுஷிக்கா ஹோக்குசாய்-இன் மகள் ஆவார், இவரது இயற்பெயர் ஒய் என்பாதாகும், இவர் தந்தைக்கு உதவியபடியே தானும் சொந்தமாக கலைப்படைப்புக்களைப் படைத்துள்ளார். இவர் அகக்கான பெண்களின் படங்களை வரைவதில்

வல்லவர். இவரது படைப்புகளில் வெளிச்சத்தையும் இருட்டையும் மாற்றிக்காட்டப்படும் ஒளிபேதம் வழக்கமாகப் பாராட்டப்படும் விதமாக இருக்கும். ஒரு சில உதாரணங்கள் மட்டுமே நிலைத்து எஞ்சின.

இன்னொரு பெய்ன் உகியோ கலைஞரின் படைப்புகளும் இந்தக் கண்காட்சியில் சேர்க்கப்பட்டுள்ளன. அவரது பெயர் உடகவா டோர்ஜியோ அல்லது யோஷிடோர்ஜியோ  (பிறப்பு 1839), இவர் குனியோஷியின் மகள் ஆவார். அவரது தந்தையுடன் அவர் படைத்த அச்சுகளை பார்க்கவும்.

**உடகவா ஹிரோஷிகே 歌川広重 (1797–1858)**

அண்டோ டோக்குடாரோ 1797ஆம் ஆண்டில் ஒரு குறைந்த அந்தஸ்து பெற்ற ஸமுராய் குடும்பத்தில் எடோவின் யாயோஷுகோஷி மாவட்டத்தில் பிறந்தவர் ஆவார்.

இவரது தந்தை தீயணைப்பு பாதுகாப்பு ஆய்வாளராக அருகிலுள்ள ஷோகன் கோட்டையில் பணியாற்றினார். திடுமென அனாதையான ஹிரோஷிகே பதின்மூன்றாம் வயதில் ஒரு பணிப்பயிலுநராக தலை சிறந்த அச்சு கலைஞரான உடகவா டோயோஹிரோ உடன் பயிற்சியில் சேர்ந்தார்.

## பயண வரிசை இவருக்குப் புகழ்சேர்த்தது

ஹிரோஷிகேயின் படைப்பாகிய Fifty-three Stations of the Tōkaidō 1833-ஆம் ஆண்டில் ஹோய்டோவினால் வெளியிடப்பட்டு இவருக்குப் புகழைத் தேடித்தந்தது. இந்தத் தொடர் 1832-இல் வரையப்பட்ட படங்களின் அடிப்படையில் அமைந்தது, அதிகாரிகளுடன் கியோட்டோவுக்கு

மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணம் ஷோகனின் சார்பாக சக்கரவர்த்திக்கு வழங்கப்பட்ட வருடாந்திரப் பரிசை (குதிரைகளை) ஒப்படைக்க சென்ற பயணம் ஆகும். இந்த தொடர் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது காரணம் என்னவென்றால் அப்போது பயணத்தில் ஏற்பட்டிருந்த மிகப்பெரும் ஆர்வம் ஆகும்.

## புதுமையான கலைப் பாணி

டோக்கைடோ தொடர் ஹிரோஷிகேவை ஒரு மிகச்சிறந்த நிலப்பரப்பு அழகியல் படங்களைப் படைக்கும் கலைஞராக நிலைநிறுத்தியது. மேற்கத்திய கோட்டு அம்சத்தை நுணுக்கத்துடன் பயன்படுத்தி இவர் இடவெளிகளைப் பயன்படுத்திய விதம் மிகவும் அற்புதமானது. மேலும் படிநிலை நிற அச்சு இவரது அழகியல் நிலப்பரப்பு

படங்களுக்கு கவிதையைப் போன்ற உயர்ந்த பாணியைக் கொடுத்தது.

## எடோவின் உலகிற்குள் திறக்கும் சாளரம்

ஹிரோஷிகேயும் ஹோக்குசாயும் பயணம்செய்வதை நேசித்தனர். அவர்கள் பயணம் செய்ய விரும்பினர்; அவர்கள் வழியில் சந்தித்த மக்களுடன் உரையாடினார்கள் – மீண்டும் அவர்களைச் சந்தித்தபோது உரக்கக் குரலிட்டு அழைத்துக்கொண்டனர். அவர்களின் நிலப்பரப்புக் காட்சிகளின் அச்சுகள்  எடோவின் பயண நாட்குறிப்புபோல இருந்தது.

ஹிரோஷிகேவின் நிலப்பரப்புக் காட்சிகள் உணர்வும், விருப்பமும், வருத்தமும் மகிழ்ச்சியும் நிரம்பியவை. ஜப்பானின் அழகை ஆண்டின்

பலவேறு காலக்கட்டங்களில் காண்பதற்காகத் தேடி, நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் அவர் பயணித்து வரைந்ததால் சிலவேளைகளில் அவர் “நாடோடி ஓவியர்” என்றழைக்கப்படுகிறார். திடீரென 1858-ஆம் ஆண்டில் காலரா பெருந்தொற்றுக் காலத்தில் காலமானார்.

## உடகவா குனிசாடா அல்லது டோயோகுனி III 歌川国貞 (1786–1864)

உடகவா டோயோகுனியின் சீடராக, குனிசாடா நடிகர் அச்சு மற்றும் அழகிய பெண்கள் (பிஜின்-கா) வகைகளில் முக்கியமாகப் பணியாற்றினார். வாழ்க்கையின் முடிவுநேரத்தில் டோயோகுனி என்ற கலைப்பெயரை ஏற்றுக் கொண்டு உடகவா குழு கலைஞர்களுக்குத் தலைவர் ஆனார். தமது வாழ்நாளில் பல பதினாயிரம் படைப்புகளை

அவர் படைத்தார், இவ்வாறு அவர் உகியோ-இ கலைஞர்களில் மிகவும் அதிக படைப்புகளைப் படைத்த கலைஞரானார். ( 40 அச்சுகள் உடன், அவர்தான் ACM கண்காட்சியில் மிக அதிகமாகப் பிரதிநிதிக்கப்பட்ட கலைஞர்) அவரது காலத்தில், ஹோக்குசாய், ஹிரோஷிகே அல்லது குனியோஷி ஆகியவர்களைவிட பெருமைக்குரிய கலைஞராக இருந்தார்.

**உடகவா குனியோஷி 歌川国芳 (1797–1858)**

குனியோஷி எடோவின் நிஹோன்பாஷி மாவட்டத்தில் பிறந்தார். ஒரு சிறுவராக, அவர் தன் தந்தைக்கு அவரது துணிச் சாயப் பட்டறையில் உதவினார். யோஷிஜோ அல்லது யோஷிசாபுரோ என்று இளம்பருவத்தில் அழைக்கப்பட்ட இவர், இக்குஸா மகோசபுரோ என்ற பெயரில் உடகவோ

டோயோகுனியின் கலைக்கூடத்தில் பயிலுநராகச் சேர்ந்தார் (1769–1825). அவருக்கு 17 வயதாகும்போது, அவர் தனது படைப்புகளில் உடகவா குனியோஷி என்ற பெயரில் கையொப்பமிட உரிமை பெற்றார்.

## பல ஊடகங்களில் அனுபவம்

இவரது சூய்கோடென் தொடர் (108 Heroes of the Water Margin), 1827-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு அது அவருக்குப் புகழ்சேர்த்தது. இவரது இயக்கமுள்ள படக் கோர்வைகள், ஆற்றலும் இயக்கமும் நிரம்பி, அசல் நிறக் காட்சிகளுடன் திகழ்ந்தன. தனது இளம்வயது சாயப்பட்டறை அனுபவத்துடன், பச்சைகுத்திக் கொள்ளும் படங்களுக்கு ஏற்பட்ட எழுச்சியில் படைப்புகளைப் படைத்து புகழ் தேடிக்கொண்டார்.

## வினோதமான கருப்பொருள்

சூய்கோடென் மூலம் இவருக்கு கிடைத்த புகழ் குனியோஷிக்கு கலை உலகில் சிறந்த இடத்தைப் பெற்றுத்தந்தது. இவர் "முஷா-இ குனியோஷி" (குனியோஷி பட வீரர்) என்ற அடைமொழியைப் பெற்று அந்த வகை மீது விசிறிகளை ஈர்த்தார். அவரது சில ஆர்வமூட்டும் படைப்புகளில் பேய்கள், பிசாசுகள், துர்தேவதைகள் இடம் பெற்றுள்ளன. அவரது நிலப்பரப்பு அழகியல் காட்சிகளில் மேற்கத்திய பாணை உட்கூறுகளையும், விலங்குகளுடன் காமிக் அச்சுகள், மனிதஉடலுடன் விலங்கு மார்பிஸம், மற்றும் சமூகத்தை நையாண்டி செய்யும் அச்சுகள் ஆகியவையும் குறிப்பிடத்தக்க ஆர்வத்தை ஏற்படுத்தின. அடுத்தபடியாக இவர் சிறந்த பூனை விரும்பியாக இருந்தார். குனியோஷி தமது 63-ஆம் வயதில்

அவரது ஜென்யாடனா இல்லத்தில் எடோ நகரில் காலமானார்.

## 3 ரஸ்ஸல் வோங்

இந்தப் பகுதியில், ரஸ்ஸல் வோங் எடுத்த கியோட்டோ புகைப்படங்களின் முன்னோட்டத்தை நீங்கள் காணலாம். கியோட்டோவின் கண்ணைக் கவரும் நான்கு பருவகால வண்ணங்களை ரசித்து மகிழுங்கள்!